# சாலை போக்குவரத்து குற்றங்களுக்கு

# சிறப்பு கட்டணக் கழிவு

கோலாலம்பூர், ஆக. 8- சாலை போக்குவரத்து குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட சம்மன்களை திருப்பி செலுத்த சிறப்பு கழிவு வழங்கப்படுகிறது என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் அறிவித்துள்ளது.

தேசிய மாதத்தை முன்னிட்டுஇன்று தொடங்கி செப்டம்பர் 30ஆம் தேதி வரையில் இந்த சிறப்பு கழிவு கட்டண சலுகை வழங்கப்படுவதாக அது கூறியது.

தற்போது சாலை போக்கு வரத்து குற்றங்களுக்காக மோட்டார் சைக்கிள்களுக்கு 30 வெள்ளியும் கார்களுக்கு 50 வெள்ளியும் கனரக வாகனங்களுக்கு 200 வெள்ளியும் அபராதமாக விதிக்கப்படுகிறது.

இந்த சம்மன்களை செலுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டால் அபராத தொகை விகிதம் அதிகரிக்கப்படுகிறது.

இந்நிலையில் இதுவரை செலுத்தப்படாத சம்மன்களை செலுத்துவதற்காக சிறப்பு கட்டண கழிவு வழங்கப்படும் வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளும்படி மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டது.

இதன்வழி மோட்டார் சைக்கிள்களுக்கு விதிக்கப்பட்ட சம்மன்களுக்கு 10 வெள்ளியும் மோட்டார் வாகனங்களுக்கு 20 வெள்ளியும் பேருந்துக்கள் மற்றும் லோரிகளுக்கு 50 வெள்ளியும் செலுத்த வேண்டும். செப்டம்பர் 30ஆம் தேதி வரையில் இந்த சிறப்பு கட்டண கழிவு அமலில் இருக்கும்.

ஆனால் கருப்பு பட்டிலிடப்பட்ட வாகனங்களுக்கு இந்த சிறப்பு கழிவு பொருந்தாது என்றும் மாநகராட்சி மன்றம் கூறியது.

அதே சமயத்தில் உணவகங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் சம்மன்களை செலுத்தவும் சிறப்பு கட்டண கழிவு வழங்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொரு சம்மனுக்கும் தலா 100 வெள்ளி செலுத்த வேண்டும்.

